# சிங்கப்பூரில் AI பயிலரங்கு: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் அசத்தல் சாதனை!

By Shyamsundar I | Published: Wednesday, October 14, 2026, 13:11 [IST]

Subscribe to Oneindia Tamil YouTube 5M

சிங்கப்பூர்: சிங்கப்பூரில் பொதுமக்களுக்கு உதவும் நோக்கில், அன்றாட வாழ்க்கையில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) பயன்பாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் இலவசப் பயிலரங்கு வெற்றிகரமாக நடைபெற்றது.



ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் சிங்கப்பூர் கிளை இந்த பயனுள்ள நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதற்கு சிங்கப்பூர் தேசிய நூலக வாரியம் (NLB) முழு ஆதரவை வழங்கியது.




கடந்த அக்டோபர் 11, 2026 அன்று சிங்கப்பூர் விக்டோரியா சாலையில் அமைந்துள்ள தேசிய நூலகக் கட்டிடத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. "அன்றாட வாழ்வில் செயற்கை நுண்ணறிவு" என்ற தலைப்பில் இந்த சிறப்புப் பயிலரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்றைய நவீன காலத்தில் ஸ்மார்ட்போன், கம்ப்யூட்டர் முதல் அலுவலகப் பணிகள் வரை அனைத்திலும் செயற்கை நுண்ணறிவு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆனால், அதைப்பற்றி பெரிய அளவில் தெரியாத சாதாரண மக்களும், குடும்பத்தினரும் கூட எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் வகுப்புகள் அமைந்திருந்தன.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் (NUS) முதுகலைப் பட்டம் பெற்ற முன்னணி செயற்கை நுண்ணறிவுப் பொறியாளர்களான அ. முஹம்மது மாதிஹ் மற்றும் குகனவேல் அசோக் குமார் ஆகியோர் இந்த வகுப்பை வழிநடத்தினர். கடினமான தொழில்நுட்பச் சொற்கள் ஏதுமின்றி, நாம் தினமும் பார்க்கும் எளிய உதாரணங்கள் மூலம் AI எப்படி வேலை செய்கிறது, அதை நம் வேலைகளுக்கும் படிப்புக்கும் எப்படிப் பயன்படுத்தலாம் என்று அழகாகப் புரிய வைத்தனர்.

இப்பயிற்சியில் பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் உட்பட சுமார் 100 பேர் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டு பயனடைந்தனர். கலந்து கொண்டவர்கள் தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றனர்.



சிங்கப்பூரில் வசிக்கும் தமிழ் மக்களுக்காகக் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக நலப் பணிகளைத் தொடர்ந்து செய்து வரும் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம், கடந்த 16 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியுடன் சேர்த்து இதுவரை 158 பயனுள்ள நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தி இந்த அமைப்பு பெரும் சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தகைய இலவசக் கல்விப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என ஒருங்கிணைப்பாளர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

Published On October 14, 2026